## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
## மேட்டூர் நகராட்சி

நிகழும் ஸ்ரீ பிலவ வருடம் பங்குனி மாதம் 11 ம் தேதி ஆங்கில ஆண்டு 25.03.2022ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 04.00 மணிக்கு மேட்டூர் நகராட்சியின் சாதாரண நகர்மன்ற கூட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட நிலையில் நிர்வாக காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டு அதே மன்ற பொருள்களுடன் நிகழும் ஸ்ரீ பிலவ வருடம் பங்குனி மாதம் 14 ம் தேதி ஆங்கில ஆண்டு 28.03.2022 அன்று திங்கட்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் சாதாரண கூட்டம் நகர்மன்ற தலைவர் தலைமையில் நடைப்பெற்றது.

**நாள் : 28.03.2022**
**இடம்: மேட்டூர் அணை.**

**நகர்மன்ற தலைவர்,**
**மேட்டூர் நகராட்சி.**

## மன்றப் பொருள்

**1.** நகராட்சி ஆணையாளரின் மார்ச்–2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.1 நாள்.28.03.2022**

**பதிவு செய்யப்பட்டது.**

**2.** நகராட்சி பொறியாளரின் மார்ச்–2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.2 நாள்.28.03.2022**

**பதிவு செய்யப்பட்டது.**

**3.** நகராட்சி சுகாதார அலுவலரின் மார்ச்–2022 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.3 நாள்.28.03.2022**

**பதிவு செய்யப்பட்டது.**

**4.** தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மேட்டூர் நகராட்சியில் 100 சதவிகிதம் திறந்த வெளியில் மலம் கழித்தல் (Open Defecation Free+) இல்லாத நகராட்சியாக பிரகடனப்படுத்த மேட்டூர் நகராட்சியில் மொத்தம் உள்ள 30 வார்டுகளிலும் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நகராட்சியாக (Open Defecation Free+) தூய்மையான பகுதியாக "மேட்டூர் நகராட்சியை" பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது குறித்து பொது மக்களிடமிருந்து கருத்து மற்றும் ஆட்சேபணைகள் பெற **செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம்** அவர்களின்

வழியே தினத்தந்தி நாளிதழில் 25.02.2022–ல் அறிவிக்கை விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான செலவுத் தொகை **ரூ.6,653/–ஐ** தினத்தந்தி நாளிதழுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

(அ). மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ). மேற்காண் செலவுத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.6203/2015/எச்1)**

**தீர்மான எண்.4 நாள்.28.03.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

**5.** மேட்டூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு 2022–2023 ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு தளவாடப்பொருட்கள் தேவைப்படுகின்றது.

| வ. எண் | பொருட்கள் விபரம் | தேவைப்படும் எண்கள் / அளவு |
|---|---|---|
| 1 | சீமார் மிளார் | 50 எண்கள் |
| 2 | பல் கொக்கி | 24 எண்கள் |
| 3 | குப்பை அள்ளும் கூடை | 60 எண்கள் |
| 4 | மண்வெட்டி | 40 எண்கள் |
| 5 | கடப்பாரை | 20 எண்கள் |
| 6 | இரும்பு சட்டி | 35 எண்கள் |
| 7 | சவுல் சிறியது | 40 எண்கள் |
| 8 | சவுல் பெரியது | 40 எண்கள் |
| 9 | மூங்கில் குச்சி | 80 எண்கள் |
| 10 | விளக்குமார் | 1500 கிலோ |
| 11 | கருக்கு அரிவாள் | 70 எண்கள் |
| 12 | பூ கூடை | 30 எண்கள் |
| 13 | பக்கெட் | 50 எண்கள் |
| 14 | பல் கொக்கி சிறியது | 80 எண்கள் |
| 15 | அடைப்பு எடுக்கும் கம்பி | 10 எண்கள் |
| 16 | பிரஸ் கட்டை | 50 எண்கள் |
| 17 | அரிவாள் | 50 எண்கள் |

மேற்கண்ட பொருட்களை வாங்கி வழங்கவும், அதற்காகும் உத்தேச செலவுத்தொகை ரூ.3.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும் 2022–2023 ஆம் ஆண்டிற்கு தேவைப்படும் தளவாடப் பொருட்களை வாங்கி வழங்கவும், அதற்காகும் உத்தேச செலவுத்தொகை ரூ.3.00 இலட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2641/2021/எச்1)**

**தீர்மான எண்.5 நாள்.28.03.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

**6.** மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளிலும் டெங்கு தடுப்பு பணிக்கு மூன்று எண்ணிக்கை Hand Fogging இயந்திரங்கள் மட்டும் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், நகர எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளில் உள்ள 14748 வீடுகள் மற்றும் அனைத்து தெருக்களிலும் கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள, மேற்படி மூன்று எண்ணிக்கை Hand Fogging இயந்திரங்கள் போதுமானதாக இல்லாததாலும், பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் இரண்டு எண்ணிக்கை மட்டும் Pulse Fogging (K–10–SP Portable Thermal Fogger) இயந்திரங்கள் வாங்கலாம் என துப்புரவு ஆய்வர் மற்றும் சுகாதார அலுவலர் தனது அறிக்கையில் சமர்ப்பித்துள்ளார். எனவே மேற்கண்ட இயந்திரங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் வாங்கவும், அதற்காகும் உத்தேச செலவுத்தொகை ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இதற்காகும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2539/2021/எச்1)

**தீர்மான எண்.6 நாள்.28.03.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

**7.** மேட்டூர் நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட 165 நிரந்தர தூய்மைப்பணியாளர் பணியிடங்களில் தற்போது 65 பணியாளர்கள் மட்டுமே பணி புரிந்து வருகின்றனர். 100 தூய்மைப்பணியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளதால் குறைவான பணியாளர்களைக் கொண்டு நகரின் அனைத்து வார்டுகளிலும் பொது சுகாதாரப்பணிகளை திறம்பட செய்ய இயலாது என்பதால், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் 47 ஒப்பந்த பணியாளர்களைக் கொண்டு வார்டு எண்.20 முதல் வார்டு எண்.30 முடிய 11 வார்டுகளில் தூய்மைப்பணி செய்ய தனியார் நிறுவனமாகிய M/s. Relyon Facility Services (P) Ltd., Chennai அவர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு அதன் ஒப்பந்த காலம் 31.03.2022 உடன் முடிவடைய உள்ளது. M/s. Relyon Facility Services (P) Ltd., Chennai அவர்கள் தனது 10.03.2022 ஆம் தேதிய கடிதத்தில், ஏற்கெனவே பணி செய்து வரும் விலை விகிதத்தின் அடிப்படையில் பணி புரிய சம்மதித்து மேலும் ஓராண்டுக்கு ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளனர்.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.21787/2021/EA2, நாள்.02.10.2021–ல் தெரிவிக்கப்படுள்ள அளவுகோலின்படி, மேட்டூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு

மேலாண்மை பணிகளுக்கு தேவைப்படும் பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியமர்த்திக்கொள்ள இந்நகர மன்ற தீர்மானம் எண்.130, நாள். 30.11.2021–ல் அனுமதி பெற்று, இவ்வலுவலக கடிதம், ந.க.எண்.2412/2021/எச்1, நாள்.03.12.2021–ல் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற முன்மொழிவு அனுப்பட்டுள்ளது.

மேலும், மேட்டூர் நகராட்சி நகர மன்ற தீர்மானம் எண்.176, நாள். 30.12.2020–ல் தற்போது திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளுக்கு தேவைப்படும் தூய்மை பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், பொது சுகாதார அவசியம் அவசரம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் அனுமதி பெற்று, புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்படைக்கும் வரை M/s.RELYON FECILITY SERVICES, CHENNAI அவர்களின் மூலம் முந்தைய விலை விகிதத்தின் அடிப்படையில் ஒப்பந்த அடிப்படையில் 47 பணியாளர்களைக் கொண்டு தூய்மைப்பணிகள் மேற்கொள்ளவும், மாதம் ஒன்றிற்கு அதற்காகும் தோராய செலவினம் ரூ.665849/– செலவினம் மேற்கொள்ளவும் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே, பொது சுகாதார அவசியம் அவசரம் கருதி, 01.04.2022 முதல் 30.06.2022 முடிய 3 மாதங்களுக்கு மட்டும் ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3922/2020/எச்1)

**தீர்மான எண்.7 நாள்.28.03.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

**8.** மேட்டூர் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் **2021-2022** ம் ஆண்டு மேற்கொள்ள உள்ள **Improvements to the Park at Breadsell Garden Ward No-14** ன் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிக்கை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய இந்நகராட்சி கடிதம் ந.க.எண்**2212/2021/**இ1 நாள்**.20.11.2021** மூலம் இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு தலைமை செயலகம், சென்னை அவர்களை கோரியதற்கு இணங்க Flame Advertising Company Private Limited,Chennai என்ற நிறுவனத்தின் மூலம் முரசொலி மற்றும் டெக்கான் குரோனிக்கல்

பப்ளிகேசன் நாளிதழ்களில் 23.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிக்கை விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி Flame Advertising Company Private Limited,Chennai நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை விளம்பரம் செய்தமைக்கான விளம்பர கட்டணம் ரூ.79,695/—க்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே ரூ.79,695/—யை Flame Advertising Company Private Limited,Chennai நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1486/2021/இ1)**

**தீர்மான எண்.8 நாள்.28.03.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

**9.** மேட்டூர் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 2021-2022 ம் ஆண்டு மேற்கொள்ள உள்ள மண் சாலைகளை தார்சாலையாகவும் மற்றும் பேவர் பிளாக் சாலைகளாக மாற்றும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய இந்நகராட்சி கடிதம் ந.க.எண்2212/2021/இ1 நாள்.20.11.2021 மூலம் இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு தலைமை செயலகம், சென்னை அவர்களை கோரியதற்கு இணங்க Flame Advertising Company Private Limited,Chennai என்ற நிறுவனத்தின் மூலம் முரசொலி மற்றும் TIMES OF INDIA நாளிதழ்களில் 23.11.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிக்கை விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி Flame Advertising Company Private Limited,Chennai நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி அறிக்கை விளம்பரம் செய்தமைக்கான விளம்பர கட்டணம் ரூ.47,303/—க்கான பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே ரூ.47,303/—யை Flame Advertising Company Private Limited,Chennai நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2212/2021/இ1)**

**தீர்மான எண்.9 நாள்.28.03.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

**10.** மேட்டூர் நகராட்சியில் 15–வது மத்திய நிதிக்குழு திட்டத்தின் கீழ் 2020–2021 ம் ஆண்டு மேற்கொள்ள உள்ள பணிக்களுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிக்கை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய இந்நகராட்சி கடிதம் ந.க.எண்3858/2020/இ1 நாள்.05.01.2022 மூலம் இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு தலைமை செயலகம், சென்னை அவர்களை கோரியதற்கு இணங்க Vipras Adz,Chennai என்ற நிறுவனத்தின் மூலம் மாலை முரசு தினசரி நாளிதழில் 06.01.2022 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி Vipras Adz,Chennai நிறுவனத்திடமிருந்து தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பர கட்டணம் ரூ.42,000/–க்கான பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே ரூ.42,000/–யை Vipras Adz,Chennai நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**<u>(ந.க.எண். 3858/2021/இ1)</u>**

**தீர்மான எண்.10 நாள்.28.03.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

**11.** மேட்டூர் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மத்திய அரசின் (MOUD) துறையினர் (3 STAR RATING) ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக மேட்டூர் நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின் முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் 2ம் நிலை சேகரம் செய்வது முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது.

எனவே மேட்டூர் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (GARBAGE FREE CITY) மத்திய அரசால் (MOUD) வழங்கப்படும் மூன்று நட்சத்திர அங்கீகாரம் (3 STAR RATING) பெற சுய உறுதிமொழி சான்றிதழுக்கு (SELF DECLARATION) நகர்மன்ற அனுமதி அளித்துள்ளது குறித்து பொது மக்களிடமிருந்து கருத்து மற்றும் ஆட்சேபணைகள் பெற **செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம்** அவர்களின் வழியே KAL PUBLICATIONS PVT. LTD என்ற விளம்பர நிறுவனம் மூலம் தினகரன் நாளிதழில் 25.02.2022–ல் அறிவிக்கை விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான செலவுத் தொகை **ரூ.6,216/–**ஐ KAL PUBLICATIONS PVT. LTD விளம்பர நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

(அ). மன்றம் அனுமதிக்கலாம்.

(ஆ).மேற்காண் செலவுத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.2599/2021/எச்1)**

**தீர்மான எண்.11 நாள்.28.03.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

**12.** இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள சைக்கிள் நிலையத்தில் இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்தம் செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை 2019–2020 முதல் 2021–2022 முடிய மூன்று ஆண்டுகளுக்கு திரு.கே.சூர்யா த/பெ குல்லகவுண்டர், ராமன் நகர் (அஞ்சல்), மேட்டூர் அணை என்வருக்கு வழங்கப்பட்டது. மேற்படி குத்தகைதாரர் 2019–2020ஆம் ஆண்டுக்கு உரிமத் தொகைகளை செலுத்தி விட்டார். 2020–2021 ஆம் ஆண்டுக்கு உரிமத்தொகை மற்றும் வரித்தொகையாக ரூ.12,88,819/– ஐ செலுத்தவில்லை. உரிமத்தொகை மற்றும் வரித்தொகைகளை செலுத்தக்கோரி பல அறிவிப்புகள் அனுப்பியும், நேரில் பல முறை தெரிவித்தும் தொகைகளை செலுத்தவில்லை. எனவே மேற்படி குத்தகைதாரரின் உரிமத்தை ரத்து செய்ய இந்நகர்மன்ற தீர்மான எண்.136 நாள்.30.11.2021ன்படி அனுமதி பெறப்பட்டு குத்தகை உரிமம் ரத்து செய்து 03.12.2021 முதல் நகராட்சி மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. எனவே மேற்படி குத்தகைதாரரால் செலுத்தப்படாத வருவாய் இழப்புத்தொகை ரூ.12,88,819/–வசூல் செய்ய இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.எஸ்.பீட்டர்ராஜ் மூலம் வழக்கு தொடரவும் அதற்கான செலவுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

**<u>(ந.க.எண். 40/2022/அ2)</u>**

**தீர்மான எண்.12 நாள்.28.03.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

**13.** மேட்டூர் நகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்கண்ட உரிம இனங்களின் உரிமக் காலம் 31.03.2022 உடன் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2008ன் 01.04.2022 முதல் 31.03.2025 முடிய உள்ள மூன்று ஆண்டு காலத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் உரிமங்களை ஒப்படைப்பதற்கும், ஏல விளம்பரங்களை நாளிதழில் விளம்பரம் செய்யவும், ஏல அறிக்கைகள் அச்சடிக்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண் | உரிம இனத்தின் விவரம் |
|---|---|
| 1 | நகராட்சி எல்லைக்குள் வாரச்சந்தைகள், தினசரி மார்க்கெட், ஸ்டேட் பாங்க் கார்னர் முதல் காமராஜ் சிலை வரை (சின்னபார்க், சதுரங்காடி பகுதி மற்றும் தங்கமாபுரிபட்டிணம் வளைவு பகுதிகள் தவிர சாலை ஓரங்களில் தற்காலிகக் |

| | |
|---|---|
| | கடை வைப்பவர்களிடமும், தெருவில் வாகனங்கள் மூலம் வியாபாரம் செய்பவர்களிடமும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |
| 2 | பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள ஏ.சி.சீட் கூரை போடப்பட்ட 12.50X 2.50மீ பரப்பளவுள்ள கூரை போடப்பட்ட சைக்கிள் நிறுத்துமிடம் மற்றும் அதைச் சார்ந்த சுமார் 100' X 30 ' சதுர அடி அளவுள்ள காலி இடமும் இதற்கும் சேர்த்து சைக்கிள் நிலையத்தில் இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்தம் செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. 2015–2016 முதல் 2017–2018 முடிய மூன்று ஆண்டு காலத்திற்கு ஏற்கனவே உள்ள பொது ஏலம் மற்றும் பொது சிறப்பு நிபந்தனைகள் இதற்கும் பொருந்தும்

2. அரசாணை (நிலை) எண்.181 நாள்.19.09.2008ன்படி முதலாம் ஆண்டு (2022–2023) கோரப்படும் உரிமத் தொகையில் இரண்டாம் ஆண்டிற்கு (2023–2024) முதலாம் ஆண்டின் உரிமத்தொகையில் இருந்து 5% உயர்வு செய்து நிர்ணயம் செய்யவும், மூன்றாம் ஆண்டுக்கு (2024–2025) இரண்டாம் அரையாண்டின் உரிமத் தொகையில் இருந்து 5% உயர்வு செய்து நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்

**<u>(ந.க.எண். 1528/2022/அ2)</u>**

**தீர்மான எண்.13 நாள்.28.03.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

**14.** இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் ஈப்பு வாகனத்தின் (TN 52 V 4660) பழுதுகளை சரி செய்ய இந்நகர்மன்ற தீர்மானம் எண்.25 நாள்.25.01.2022–ன்படி உத்தேச மதீப்பீட்டு தொகை ரூ.1,45,000/–க்கு அனுமதி பெறப்பட்டு விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி ரூ.1,44,800/– வழங்கிய மகேந்திரா கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற ஸ்ரீபதி மோட்டர்ஸ், கொமாரபாளையம், நாமக்கல் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியும் வாகனம் பழுது சரி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. தற்போது பழுது முடிக்கப்பட்டு மேற்படி கம்பெனியிலிருந்து 17.03.2022–ந் தேதிய செலவினப் பட்டியல் படி ரூ.1,69,044/–செலுத்தக் கோரப்பட்டுள்ளது. மேலும் திரு.கே.பெரியநாயகம், ஈப்பு ஓட்டுநர் தனது 17.03.2022–தேதிய கடிதத்தில் ஈப்பு TN 52 V 4660–ன் வாகன பழுதுகளை சரி செய்ய ஸ்ரீபதி மோட்டர்ஸ், கொமாரபாளையத்தில் விடப்பட்டது மேலும் வாகனத்தை பிரித்து பார்க்கும் போது முன்புறம் பம்பர், முன்புறம் கீரில், வண்டியில் உள்ள குறுக்கு பார், கியர் பாக்ஸ் பெட்டி, டிங்கரிங் மற்றும் பெயிண்டிங் பணிகள் அவசியம் செய்ய வேண்டியநிலை ஏற்பட்டதால் உத்தேச செலவினத்தைக் காட்டிலும் கூடுதலாக ரூ.24,244/– செலவாகிவுள்ளது என்று தெரிவித்துள்ளார். பொறியாளரின் 17.03.2022

தேதிய அறிக்கையின்படி ஈப்பு வாகனத்தின் கூடுதல் பழுதுகளை சரி செய்ததையும் அதற்கான கூடுதல் செலவினம் ரூ.24,244/—க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1786/2021/இ1)**

**தீர்மான எண்.14 நாள்.28.03.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

**15.** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தினசரி திடக்கழிவு மேலாண்மை தொடர்பான அறிக்கைகள், பிறப்பு இறப்பு சான்றிகழ்கள், கொரோனா பணிகள் தொடர்பான அறிக்கை தயார் செய்தல் மற்றும் டெங்கு காய்ச்சல் போன்ற நோய்கள் குறித்து அறிக்கை அனுப்பி வைக்கும் பணிகளுக்கு அவசர அவசியம் கருதி Personal Computer-1 எண்ணிக்கை மற்றும் Scanner, Xerox வசதிகளுடன் கூடிய Printer-1 எண்ணிக்கை கொள்முதல் செய்து வழங்குமாறு இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் சுகாதார அலுவலரின் அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

எனவே பொது சுகாதாரப் பிரிவிற்கு (கணினி) Acer intel Core I3 10105 8GB/1000GB HDD/Window 10 Professional Acer (Version M200-H510) Computer GMM (Government 'E" Marketing)-ன் படி ரூ.52,870/—க்கும் மற்றும் (அச்சுப்பொறி) Scanner, Xerox வசதி கொண்ட Printer ரூ.44,070/— ஆக உள்ளது.

எனவே மேற்காணும் கணினி (Computer) மற்றும் அச்சுப்பொறி (Printer) அரசு திறந்தவெளி சந்தை மதிப்பின்படி (GEM) கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.96,500/— க்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2589—1/2021/இ1)**

**தீர்மான எண்.15 நாள்.28.03.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

**16.** மேட்டூர் நகராட்சி பகுதிகளுக்குட்பட்ட அனைத்து தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.183 நாள்.30.12.2020ல் அனுமதி வழங்கப்பட்டு

திருவாளர் P&B Enterprises, Erode நிறுவனத்தின் மூலம் தெருவிளக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்யப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தக்காலம் 31.12.2021ல் முடிவடைந்தது. தெருவிளக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்க்கொள்ள 03.12.2021ல் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திட்டபிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகர் மன்ற தீர்மான எண்.22 நாள்.25.01.2022ல் அனுமதி வழங்கப்பட்டு ஜனவரி 2022 முதல் மார்ச் 2022 வரை ஒப்பந்தகாலம் நீட்டிப்பு செய்யப்பட்டு தற்போது தெருவிளக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் திருவாளர் P & B Enterprises, Erode மூலமாக மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி நீட்டிக்கப்பட்ட ஒப்பந்தகாலம் 31.03.2022 உடன் முடிவடைவதால் தெருவிளக்கில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டியுள்ளதாலும் புதிய வழிமுறைகளின் படி தெருவிளக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி கிடைக்கப்பெறும் வரையிலும் அத்தியாவசிய பணியாக இருப்பதால் மேலும் மூன்று மாதங்களுக்கு ஏப்ரல் 2022 முதல் ஜீன் 2022 வரை ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின்படி தற்போது தெருவிளக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வரும் திருவாளர்.P&B Enterprises Erode ஒப்பந்ததாருக்கு மூன்று மாதங்களுக்கு (ஏப்ரல் 2022 முதல் ஜீன் 2022 வரை) பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தகாலத்தை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசரஅவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும், பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டும் திருவாளர்.P&B Enterprises Erode ஒப்பந்ததாரருக்கு தெருவிளக்கு இயக்கம் மற்றும் பராமரித்தல் பணியினை ஏப்ரல் 2022 முதல் ஜீன் 2022 வரை மூன்று மாதங்களுக்கு ஒப்பந்தகாலத்தை மன்றம் நீட்டிப்பு செய்யலாம்.

**(ந.க.எண். 2312/2019/இ1)**

**தீர்மான எண்.16 நாள்.28.03.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

**17.** மேட்டூர் நகராட்சியில் பழைய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், புதிய சுத்திகரிப்பு நிலையம், 5 மேல்நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் 2 தரை மட்ட நீர் தேக்க தொட்டி ஆகிவற்றை மாதம் இருமுறை சுத்தம் செய்யவும் மேலும் இந்நகராட்சி பகுதிகளில் தினமும் விநியோகம் செய்யப்படும் குடிநீரின் கலங்கல் தன்மை கேற்ப மற்றும் ஆற்றிலிருந்து ஏற்றம் செய்யப்படும் தண்ணீரின் கலங்கல் தண்மை கேற்ப ஆலம் சேர்க்கப்பட வேண்டிய அவசியம் உள்ளதால் 2020–2023 –ம் ஆண்டிற்கு தேவையான ஆலம் (Alum) மற்றும் பிளிச்சிங் பவுடர் (Bleaching Powder) கொள்முதல் செய்து கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு இந்நகராட்சி உதவி பொறியாளர் மற்றும் பொறியாளர் தனது 14.03.2022ந் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

எனவே இந்நகராட்சி குடிநீர் விநியோக பணிக்கு தேவையான ஆலம் (Alum) மற்றும் பிளிச்சிங் பவுடர் (Bleaching Powder) கொள்முதல் செய்யவும் அதற்கான உத்தேச மதிப்பீடுத் தொகை ரூ.7.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1530/2022/இ1)**

**தீர்மான எண்.17 நாள்.28.03.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

**18.** இந்நகராட்சிக்கு சொந்தமான அன்னை காவேரி திரையரங்கினை உரிமத்தை குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்த உரிமதாரர் திரு.எஸ்.அசோகன் என்பவர் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய குத்தகைத் தொகை ரூ.8,19,802/—ஐ செலுத்தாததால் நகராட்சியின் சார்பாக மேற்படி உரிமதாரர் மீது வழக்கு தொடரப்பட்டு வழக்கு எண்.O.S.No.323/2009ன்படி மாவட்ட முன்சீப் கோர்ட் மேட்டூர் நீதமன்றத்தில் நடைபெற்று வந்த வழக்கு நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வரப்பெற்றதை தொடர்ந்து மேற்படி உரிமதாரர் தீர்ப்பினை எதிர்த்து I.A.No.83/2016 in A.S.No.24/2017ன்படி மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு தொடர்ந்திருந்தார். மேற்படி மேல்முறையீட்டு மனுவிலும் O.S.No.323/2009ன் தீர்ப்பினை உறுதி செய்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை தொடர்ந்து, இரண்டாம் முறையாக மேல்முறையீட்டு மனுவினை வழக்கு எண்.S.A.No.1018/2021ன்படி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். மேற்படி இரண்டாம் மேல்முறையீட்டு மனுவில் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வரப்பட்டுள்ளது. ஏற்கனவே நகராட்சியின் வழக்கறிஞராக நியமிக்கப்பட்டிருந்த திரு.T.M.A.இனியன் அவர்கள் மேற்படி வழக்கினை நடத்தி வந்தார். தற்போது நகராட்சியின் வழக்கறிஞராக திரு.எஸ்.பீட்டர்ராஜ், வழக்கறிஞர் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். மேற்படி நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு உரிமதாரர் திரு.எஸ்.அசோகன் அவர்களின் மீது (E.P) நிறைவேற்று மனு தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.எஸ்.பீட்டர்ராஜ் அவர்கள் ஆஜராகவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/—க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.43/2010/அ2)**

**தீர்மான எண்.18 நாள்.28.03.2022**
**அனுமதிக்கப்பட்டது.**

**19.** இந்நகராட்சிக்கு சொந்தமான மேட்டூர் கேம்ப் பேருந்து நிலையத்தில் கட்டணக் கழிப்பறை மற்றும் குளியலறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை 2018—2019 முதல் 2020—2021 முடிய ( 01.04.2018 முதல் 31.03.2021 முடிய ) உள்ள காலத்திற்கு திரு.ஆனந்தகுமார் த/பெ.குணசேகரன்,

21/209ஏ, ஆஸ்பத்திரி காலனி, மேட்டூர் என்பவருக்கு வழங்கப்பட்டது. மேற்படி குத்தகைதாரர் 2018–2019 ஆம் ஆண்டுக்கான உரிமத்தொகை ரூ.10,54,000/– மற்றும் 2019–2020 ஆம் ஆண்டுக்கான உரிமத்தொகை ரூ.11,06,700/– ஐ முழுவதையும் செலுத்திவிட்டார். 2020–2021 ஆம் ஆண்டுக்கான உரிமத்தொகை மற்றும் வரித்தொகைகள் ரூ.11,62,035/– செலுத்திடக் கோரி கடந்த 21.08.2020 மற்றும் 21.09.2020 ஆகிய தேதிகளில் பதிவு தபாலில் அறிவிப்புகள் அனுப்பப்பட்டும் உரிமத் தொகை மற்றும் வரித்தொகையை செலுத்தவில்லை. 2020–2021 ஆம் ஆண்டுக்கான உரிமத்தொகை ரூ.11,62,035/–ல் அரசாணை எண்.298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.09.2020 ன்படி கொரோனா கால ஊரடங்கிற்காக ஏப்ரல் 2020 மற்றும் மே 2020 ஆகிய மாதங்களுக்கான தொகை ரூ.1,93,673/–ஐ தள்ளுபடி செய்ய நகர் மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில், நகர்மன்றத் தீர்மானம் எண்.145, நாள்.25.09.2020 ல் மேற்படி தொகையை தள்ளுபடி செய்ய நகர்மன்ற அனுமதியைத் தொடர்ந்து 2020–2021 ஆம் ஆண்டுக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.9,68,362/– ஐ மேற்படியார் செலுத்தவில்லை. எனவே மேற்படி உரிமத்திற்கு செலுத்திய வைப்புத் தொகையில் இருந்து தற்போது ரூ.3,50,000/–ஐ சரிசெய்து கொண்டு மீதமுள்ள நிலுவைத் தொகை ரூ.6,18,362/–ஐ உரிம விதிகளின்படி செலுத்த தவறியதால், நிலுவைத் தொகைகளை வசூலிக்கும் பொருட்டு, மேற்படி நபரின் மீது வழக்கு தொடுத்திட வக்காலத்தினை ஒப்படைத்து நகராட்சி வழக்கறிஞர் திரு.எஸ்.பீட்டர்ராஜ் அவர்களை வழக்கில் ஆஜராகி வழக்கினை நடத்திடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3928/2017(2)/அ2)**

**தீர்மான எண்.19 நாள்.28.03.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

**20.** இந்நகராட்சிக்கு சொந்தமான ஞாயிறு தோறும் கூடும் வாரச்சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை 2019–2020 முதல் 2021–2022 முடிய (01.04.2019 முதல் 31.03.2022 முடிய) உள்ளகாலத்திற்கு திரு.ஜி.சதீஷ்குமார் த/பெ.ஆர்.குணசேகரன், காவேரி பாலம், மேட்டூர் அணை என்பவருக்கு வழங்கப்பட்டது. மேற்படி குத்தகைதாரர் 2019–2020 ஆம் ஆண்டுக்கான உரிமத்தொகை ரூ.1,46,000/– ஐ முழுவதையும் செலுத்திவிட்டார். 2020–2021 ஆம் ஆண்டுக்கான உரிமத்தொகை மற்றும் வரித்தொகைகள் ரூ.1,56,458/– செலுத்திடக் கோரி கடந்த 21.08.2020 மற்றும் 21.09.2020 ஆகிய தேதிகளில் பதிவு தபாலில் அறிவிப்புகள் அனுப்பப்பட்டும் உரிமத்

தொகை மற்றும் வரித்தொகையை செலுத்தவில்லை. எனவே மேற்படி உரிமத்தை துறை மூலம் 01.04.2021 முதல் வசூலிக்கப்பட்டு வருகிறது. 2020–2021 ஆம் ஆண்டுக்கான உரிமத்தொகை ரூ.1,53,300/–ல் அரசாணை எண்.298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.09.2020 ன்படி கொரோனா கால ஊரடங்கிற்காக ஏப்ரல் 2020 மற்றும் மே 2020 ஆகிய மாதங்களுக்கான தொகை ரூ.25,550/–ஐ தள்ளுபடி செய்ய நகர் மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு, நகர்மன்றத் தீர்மானம் எண்.145, நாள்.25.09.2020 ல் மேற்படி தொகையை தள்ளுபடி செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து 2020–2021 ஆம் ஆண்டுக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.1,30,908/–ஐ செலுத்தவில்லை. எனவே மேற்படி உரிமத்திற்கு இவர் செலுத்திய வைப்புத் தொகையில் இருந்து தற்போது ரூ.60,000/– ஐ சரிசெய்து கொண்டு மீதமுள்ள நிலுவைத் தொகை ரூ.70,908/– ஐ உரிம விதிகளின் படி செலுத்த தவறியதால், நிலுவைத் தொகைகளை வசூலிக்கும் பொருட்டு, மேற்படி நபர் மீது வழக்கு தொடுத்திட வக்காலத்தினை ஒப்படைத்து நகராட்சி வழக்கறிஞர் திரு.எஸ்.பீட்டர்ராஜ் அவர்களை வழக்கில் ஆஜராகி வழக்கினை நடத்திடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3928/2017(1)/அ2)**

**தீர்மான எண்.20 நாள்.28.03.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

**21.** மேட்டூர் நகராட்சி சீத்தாமலையில் உள்ள பழைய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் 1975–ம் ஆண்டு அமைக்கப்பட்டது. மேலும் இதன்மூலம் வழங்கப்படும் குடிநீர் குழாய்கள் சுமார் 45 வருடங்களுக்கு முன்பு பதிக்கப்பட்டதாகும். எனவே குடிநீர் பகிர்மான குழாய்களில் அடிக்கடி உடைப்புகள் ஏற்பட்டு கசிவுகள் ஏற்பட்டு குடிநீர் வீணாக செல்வதுடன் பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்குவதில் சிக்கல் ஏற்படுவதால் உடைப்புகளை உடனடியாக சரிசெய்ய பொருட்களும், வேலை ஆட்களும் தேவை என இந்நகராட்சி குழாய் பொருத்துநர் தெரிவித்ததை அடுத்து இந்நகராட்சி உதவி பொறியாளர் தனது 14.03.2022 தேதிய அறிக்கையில் இந்நகராட்சி 30 வார்டுகளிலும் சுமார் 159 KM பகிர்மான குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் மேற்காணும் காரணங்களால் குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளால் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதில் தாமதம் ஏற்படுவதால் பழுதுகளை உடனடியாக

சரிசெய்ய ஏதுவாக உதிரிபாகங்கள் மற்றும் வேலை ஆட்கள் கூலி ஆகியவைக்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.8.00 இலட்சத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி பகிர்மான குழாய் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய ஏதுவாக உதிரிபாகங்கள் மற்றும் வேலை ஆட்கள் கூலிக்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.8.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1530–1/2022/இ1)**

**தீர்மான எண்.21 நாள்.28.03.2022**

**அனுமதிக்கப்பட்டது.**